# BSNL ஊழியர் சங்கம்
## தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:108** **தேதி:-15.06.2016**

## ஊழியர் பிரச்சனைகளை இழுத்தடிக்காதீர்- இயக்குனர் குழுவிற்கு எதிராக ஆர்ப்பாட்டமும் இதர மத்திய சங்க செய்திகளும்

அன்பார்ந்த தோழர்களே,

**ஊழியர்களின் பிரச்சனைகளின் மீது BSNL இயக்குனர் குழுவின் எதிர்மறை அணுகுமுறைக்கு எதிராக 05.07.2016ல் கருப்பு அட்டையணிந்து ஆர்ப்பாட்டம்:-**

BSNL இயக்குனர் குழு ஊழியர்களின் பிரச்சனைகள் மீது எதிர்மறை நடவடிக்கையினை கையாண்டு வருகிறது. நிர்வாகக் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பட்ட சில நியாயமான பிரச்சனைகள் BSNL இயக்குனர் குழுவின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளன. ஆனால் இயக்குனர் குழு இதன் மீது முடிவு எடுக்காமல் உள்ளது. ஊழியர்களுக்கு E1 ஊதிய விகிதத்தில் பதவி உயர்வு பிரச்சனை இயக்குனர் குழுவின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இது கடந்த இரண்டு வருடங்களாக இயக்குனர் குழுவிடம் தேங்கி உள்ளது. அது போலவே, நேரடி நியமன ஊழியர்களுக்கு ஓய்வூதிய பங்கீடு, 01.01.2007க்கு பின் பணியமர்த்தப்பட்ட ஊழியர்களில் விடுபட்டவர்களுக்கு ஒரு ஆண்டு ஊதிய உயர்வு தொகை, காசுவல் ஊழியர்களுக்கு பணிக்கொடை உள்ளிட்ட மிக முக்கியமான பிரச்சனைகள் இயக்குனர் குழுவால் நீண்ட காலமாக தேக்கி வைக்கப்பட்டுள்ளது. ஊழியர் பிரச்சனைகள் மீது இயக்குனர் குழுவின் எதிர்மறை அணுகுமுறைக்கு எதிராக தனது கடுமையான எதிர்ப்பை பதிவு செய்வது என 14.06.2016 அன்று கூடிய BSNL ஊழியர் சங்கத்தின் அகில இந்திய மையக்கூட்டம் முடிவு செய்துள்ளது. UNITED FORUMத்தில் உள்ள கூட்டணி சங்கங்களை கலந்தாலோசித்த பின் நாடு தழுவிய அளவிலே **05.07.2016 அன்று கருப்பு அட்டையணிந்து ஆர்ப்பாட்டம்** நடத்துவது என முடிவு செய்யப்பட்டுள்ளது. எனவே அனைத்து மாவட்ட/ மாநில சங்கங்களும் SNATTA மற்றும் BSNLMS ஆகிய சங்கங்களோடு இணைந்து இந்த போராட்டத்தை வெற்றிகரமாக்கிட வேண்டுமென மத்திய சங்கம் கேட்டுக் கொண்டுள்ளது.

**தோழர் குஞ்ஞானந்தன் காலமானார்:-**

AIBDPA சங்கத்தின் முன்னாள் அகில இந்திய பொருளாளர் தோழர் M.P.குஞ்ஞானந்தன் 14.06.2016 அன்று காலை மரணமடைந்தார். கேரள மாநிலம் கோழிக்கோடு மாவட்டத்தின் மூன்றாம் பிரிவு சங்கத்தின் மாவட்ட செயலாளராக சிறப்புடன் பணியாற்றியவர். சமீபத்தில் நடைபெற்ற AIBDPA சங்கத்தின் திருப்பதி அகில இந்திய மாநாடு வரை அதன் பொருளாளராக திறம்பட செயல்பட்டவர். தனது இறுதி மூச்சு வரை தொழிலாளி வர்க்கத்தின் போராளியாக செயல்பட்ட தோழர் குஞ்ஞானந்தனின் மறைவிற்கு BSNL ஊழியர் சங்கம் தனது அஞ்சலியை உரித்தாக்கிக் கொள்கிறது.

**BSNL ஊழியர்களின் ஓய்வூதிய பங்கீடு:-**

BSNL ஊழியர்களுக்கு ஓய்வூதிய பங்கீடாக ஊழியர்கள் வாங்கும் அடிப்படை சம்பளத்தின் அடிப்படையில் வழங்க வேண்டுமே ஒழிய சம்பள விகிதத்தின் உச்ச பட்சத்தில் BSNL நிறுவனம் DOTக்கு வழங்கக் கூடாது என்று FORUM தொடர்ந்து வற்புறுத்தி வருகிறது. ஊதிய தேக்க பிரச்சனைகளுக்கு இதுவே அடிப்படையான காரணம். இந்த பிரச்சனையை பாராளுமன்ற மேலவை உறுப்பினர் தோழர் T.K.ரங்கராஜன் தொலை தொடர்பு அமைச்சரிடம் கொண்டு சென்றார். இது தொடர்பாக மத்திய தொலை தொடர்பு அமைச்சர் 30.05.2016 அன்று தோழர் T.K.ரங்கராஜன் அவர்களிடம், இந்த பிரச்சனை பரிசீலனையில் உள்ளதாகவும், விரைவில் இறுதி முடிவு எடுக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார். அமைச்சரிடம் இந்த பிரச்சனையை எடுத்து சென்ற

பாராளுமன்ற உறுப்பினர் தோழர் T.K.ரங்கராஜன் அவர்களுக்கு BSNL ஊழியர் சங்கம் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறது.

**2014-15ஆம் ஆண்டு காலிப்பணியிடங்களுக்கான JTO LICE தேர்வை ஒத்தி வைக்காமல் நடத்துக:-**

2014-2015 ஆம் ஆண்டு காலிப்பணியிடங்களுக்கான JTO LICE தேர்வு 28.08.2016 அன்று நடைபெற உள்ளது. 22.05.2016 அன்று நடைபெற்ற தேர்வு முடிவுகள் தாமதப்படுவதால் ஊழியர்கள் மத்தியில் ஒரு நிச்சயமற்ற நிலைமை உருவாகி உள்ளது. இது தொடர்பாக நமது பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு, தோழர் சுவபன் சக்கரவர்த்தி Dy.GS., BSNLEU மற்றும் தோழர் சுனில் கௌதம் Dy.GS SNATTA ஆகியோர் 13.06.2016 அன்று GM(Rectt) அவர்களை சந்தித்து 28.08.2016 அன்று நடைபெற உள்ள JTO LICE தேர்விற்கான அறிவிப்பை 15.07.2016 அன்று வெளியிட வேண்டும் என கேட்டுக் கொண்டனர். இதில் ஆவன செய்வதாக அவர் உறுதி அளித்துள்ளார்.

**தேர்வு முடிவுகள் வெளி வருவதில் புதிய தடங்கல்:-**

22.05.2016 அன்று நடைபெற்ற JTO LICE தேர்வு முடிவுகள் வெளிவருவதற்காக நமது BSNL ஊழியர் சங்கம் தொடர்ந்து முயற்சி செய்து வருகிறது. நமது பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு, தோழர் சுவபன் சக்கரவர்த்தி Dy.GS., BSNLEU மற்றும் தோழர் சுனில் கௌதம் Dy.GS SNATTA ஆகியோர் 13.06.2016 அன்று GM(Rectt) திருமிகு அனிமா ராய் மற்றும் GM(Estt) திருமிகு மது அரோரா அவர்களை சந்தித்து இந்த பிரச்சனையை விவாதித்தனர். RECRUITMENT கிளை செக்ஷன் தேர்தல் முடிவுகள் வெளியிட தயாராக உள்ளதாகவும், ஆனால் ஹைதராபாத் CAT-இன் உத்தரவு காரணமாகவே அது வெளியிடப்படாமல் உள்ளதாகவும் GM(Rectt) தெரிவித்தார். திரு ஹரிசிங் TTA மற்றும் இதரர்களால் தொடுக்கப்பட்டுள்ள இந்த வழக்கில், வழக்கின் முடிவிற்கு உட்பட்டே தேர்வு முடிவுகள் இருக்க வேண்டும் என CAT தனது 18.05.2016 அன்று வெளியிட்டுள்ள உத்தரவின் மூலம் தெரிவித்துள்ளது. தேர்வு முடிவுகள் வெளிவருவதற்கு நிச்சயம் இந்த உத்தரவு தடையாகவே உள்ளது. தேவைப்பட்டால், தேர்வு முடிவுகளை விரைவில் வெளியிடுவதற்கு ஒரு தாக்கீதை தொடுக்க வேண்டும் என தொழிற்சங்க தலைவர்கள் GM(Estt) அவர்களை வற்புறுத்தினர். இதற்கு தேவையானவற்றை செய்வதாக GM(Estt) தெரிவித்தார்.

**22.05.2016 தேர்வினை PROVISIONALஆக எழுத அனுமதிக்கப்பட்டவர்களுக்கு……:-**

2007ஆம் ஆண்டு TTAதேர்வில் வெற்றி பெற்று 30.06.2008க்கு பின் பயிற்சிக்கு அனுப்பப்பட்டவர்களையும், 22.05.2016 அன்று நடைபெற்ற JTO LICE தேர்வில் அனுமதிக்க வேண்டும் என BSNL ஊழியர் சங்கம் கடுமையாக வாதிட்டது. இதனிடையே CAT உத்தரவு படி இது போன்ற ஒரு சில தோழர்கள் தேர்வு எழுத அனுமதிக்கப்பட்டார்கள். இந்த தீர்ப்பின் அடிப்படையில் இது போன்றுள்ள அனைத்து தோழர்களையும் தேர்வு எழுத அனுமதிக்க வேண்டும் என BSNL ஊழியர் சங்கம் கோரியது. நிர்வாகத்தால் நமது கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டு, அவர்களை தேர்வு எழுத PROVISIONALஆக அனுமதித்தது. எனினும் இவர்கள், புதிய தேர்வு விதிகளின் படி உள்ள தகுதியான, 01.07.2013 அன்று 5 ஆண்டு கால சேவையினை முடித்திருக்க வில்லை. மேலும் குழப்பங்கள் வராமல் இருப்பதற்காக, இந்த PROVISIONALஆக அனுமதி வழங்கப்பட்ட தேர்வாளர்களை முறையானவர்களாக மாற்றுவதற்கு தேவையான நிர்வாகக் குழுவின் ஒப்புதலை கார்ப்பரேட் அலுவலகம் கோரியுள்ளது. நிர்வாகக் குழு இந்த வாரத்தில் ஒப்புதலை வழங்கும் என நம்புகிறோம். இது BSNL ஊழியர் சங்கத்தின் மிகப்பெரிய வெற்றி.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுடன்,

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர்**